இராயர் சில அபூர்வமான கிளிகளை வளர்த்து, “**கிருஷ்ணா! ராமா! கோவிந்தா! அச்சுதா! அனந்தா!**” என்று பகவானின் திரு நாமங்களை ஓயாமல் சொல்லும்படி அவற்றிற்குக் கற்பித்து பழக்கப்படுத்திவிட்டு, “**என்னுடைய கிளிகளுக்குள்ள கடவுள் பக்தி மனிதர்களிடம் கூடக் காணமுடியாது!**” என்று பெருமையாகச் சொன்னார்.
அப்போது தெனாலிராமன் “**இல்லை அரசே! பகுத்தறிவுள்ள மனிதர் தான் பக்திமானாகவோ, பக்தியற்ற நாஸ்திகனாகவோ இருக்கமுடியும்! தாங்கள் கிளிகளுக்கு கொடுக்கும் இனிப்புப் பண்டங்களைத் தின்ன ஆசைப்பட்டுத் தான் அக்கிளிகள் இறைவனின் திருநாமத்தைச் சொல்கின்றனவே தவிர உண்மையில் அவை பக்தியால் சொல்லவில்லை.**
**அதை நான் நிரூபித்துக் காட்டாவிட்டால் என்னைத் தண்டியுங்கள்!**” என்று கூறிவிட்டுக் கிளிக்கூண்டுகளின் அருகே ஒரு முரட்டுப் பூனையைக் கொண்டுவந்து விட்டான். கிளிகள் பயத்தால் “**கீக் கீக் கீக்**” என்று கத்தினவே தவிர “**ராமா கோவிந்தா என்று சொல்!**” என்று இராயர் எவ்வளவு வற்புறுத்தியும் சொல்லவில்லை!

Tamil